



## மாடம்பாக்கத்தில் ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத்தில் சித்திரா பௌர்ணமி திருவிழா

தாம்பரம் மே.03-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த மாடம்பாக்கம் அருகிலுள்ள மதுரா நூத்தஞ்சேரி, ஜோதி நகர் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத்தில் இரண்டாம் ஆண்டு சித்திரா பௌர்ணமி திருவிழா மிகுந்த பக்தி பரவசத்துடன் நடைபெற்றது. இவ்விழாவை முன்னிட்டு (01.05.2026) அதிகாலை 6.00 மணியளவில் கணபதி ஹோமம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து காலை 8.30 மணியளவில் அருள்மிகு மாமூத்தி அம்மன் ஆலயத்திலிருந்து 108 பால்குடங்களுடன், செண்டை மேளத்தின் ஒலியோடு பக்தர்கள் ஊர்வலமாக புறப்பட்டனர். இந்த ஊர்வலத்தில் பெண்கள், இளைஞர்கள் மற்றும் கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டு அம்மனை போற்றி பாடல்கள் பாடி பக்தி முழக்கங்களுடன் நகர்ந்தனர். காலை 10.30 மணியளவில் கருமாரியம்மனுக்கு 108 பால்குட அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்து தீபாராதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மன் அருளைப் பெற்றனர். காலை 11.00 மணியளவில் நடைபெற்ற அன்னதானத்தில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று பிரசாதம் பெற்றனர். மாலை 6.30 மணியளவில் மீண்டும் தீபாராதனை நடைபெற்றதுடன், அம்மன் சாமி ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது. ஊர்வலத்தின் போது பக்தர்கள் ஆரத்தி எடுத்தும், மலர் தூவியும் பக்தி பரவசத்துடன் அம்மனை வழிபட்டனர்.

இந்த விழாவில் ஆலய நிர்வாகிகள், கிராமத்தார்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர். திருவிழா முழுவதும் பக்தி சூழல் நிலவியது குறிப்பிடத்தக்கது.



■ நீலகிரி மாவட்டத்தில் கோடை விழாவினை முன்னிட்டு, மே1 ம் தேதி முதல், போக்குவரத்து மாற்றம் நடைமுறைக்கு வந்த நிலையில், குன்னூர் அருகே வெலிங்டன் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, பிளாக்பிரிட்ஜ் பகுதியில், வெலிங்டன் காவல் துறையினர், போக்குவரத்து சரி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



## கிருஷ்ணகிரியில் நடந்தமாவட்ட அளவிலான கோடைக்கால பயிற்சி முகாமில் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்பு


கிருஷ்ணகிரி, மே 03-

கிருஷ்ணகிரியில் நடந்த மாவட்ட அளவிலான கோடைக்கால பயிற்சி முகாமில் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டுப் பிரிவு 2026ம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான 15 நாட்கள் இருப்பிடமில்லா கோடைக்கால பயிற்சி முகாம் மாணவ, மாணவிகளுக்கு கடந்த மாதம் 17ம் தேதி துவங்கி நேற்று வரை நடந்தது. காலை மற்றும் மாலை நேரங்களில் கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டரங்கில் நடந்த இப்பயிற்சியில் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.இப்பயிற்சி முகாமில், தடகளம், கைப்பந்து, டேக்வாண்டோ, குத்துச்சண்டை, ஜூடோ, கூடைப்பந்து, சிலம்பம், ஹாக்கி மற்றும் மல்லர்கம்பம் ஆகிய விளையாட்டு போட்டிகளுக்கு சிறந்த பயிற்றுனர்களைக் கொண்டு இலவசமாக பயிற்சி அளித்தனர். பயிற்சியின் நிறைவு நாளான நேற்று முகாமில் கலந்து கொண்ட அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் மாவட்ட விளையாட்டு அலுவலர் (பொ) நடராஜ முருகன் பங்கேற்பு சான்றிழ்களை வழங்கினார். இதில், பயிற்சியாளர்கள், சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பொத்தூர் கிராமம் ஸ்ரீ பொன்னியம்மன் ஆலயத்தில் பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி

மாதவரம், மே.3-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பொத்தூர் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பொன்னியம்மன் ஆலயத்தில் சித்திரை மாத பௌர்ணமியை முன்னிட்டு பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட தலைவர் பி.எஸ்.சபாபதி லோகேஷ்வரிசபாபதி ஆகியோர் ஏற்பாடு மற்றும் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அருள்மிகு ஸ்ரீ ஓதனவனேஸ்வரர் சமேத ஸ்ரீ அன்னபூரணி மற்றும் ஸ்ரீ காலபைரவர் சுவாமிகளுக்கு ஆலய பூசாரி முனுசாமி பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது.







பின்னர் சிவன் ஆலயத்திலிருந்து சுமார் 200க்கும் மேற்பட்ட பெண்கள் தங்களது சிரசியில் பால்குடம் சுமந்து பம்பை உடுக்கையுடன் ஊர்வலமாக சென்று அருள்மிகு ஸ்ரீ பொன்னியம்மனுக்கு ஆலய பூசாரி சுரேஷ் உலக மக்கள் நன்மைகள் வேண்டியும், பக்தர்களின் நேர்த்தி கடன் பூர்த்தி அடையவேண்டியும் பால்அபிஷேகம் செய்து மஹா தீபாராதனை காண்பித்தனர். இதனைத்தொடர்ந்து ஸ்ரீ பொன்னியம்மனுக்கு வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஆன்மீக சிந்தனையாளர்கள் சிதம்பரம், சங்கரலிங்கம், விஜயகுமார், வாகையா, அருண், பன்னீர்செல்வம், செந்தில், மோகன், முன்னாள் பொத்தூர் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் தேவா உள்ளிட்ட ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உட்பட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பாமக மாவட்ட தலைவர் பி.எஸ்.சபாபதி லோகேஷ்வரிசபாபதி குடும்பத்தினர்கள் சார்பில் பக்தர்களுக்கு குடை மற்றும் அறுசுவை அன்னதானம் உட்பட மங்கள பொருட்களை வழங்கினர்.



## கிருஷ்ணகிரிமலையப்ப சீனிவாச பெருமாள் கோயிலில்சித்ரா பவுர்ணமியையொட்டி உலக நன்மை வேண்டிமகா சுதர்சன யாக வேள்வி

கிருஷ்ணகிரி, மே 3-

கிருஷ்ணகிரி பழையபேட்டை மலையப்ப சீனிவாச பெருமாள் கோயிலில், சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, கடந்த 2 நாட்களாக உலக நன்மை வேண்டி மகா சுதர்சன யாக வேள்வி நடந்தது.கிருஷ்ணகிரி பழையபேட்டை மலையப்ப சீனிவாச பெருமாள் கோயிலில், சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, கடந்த 2 நாட்களாக உலக நன்மை வேண்டி மகா சுதர்சன யாக வேள்வி நடந்தது. நேற்று, ஐந்தாம் கால யாக வேள்வி, மஹா பூர்ணாஹூதி, கடம் புறப்பாடு, உலக நன்மை வேண்டுதலுடன், 50க்கும் மேற்பட்ட பெண்கள் பால்குடங்களை ஊர்வலமாக கொண்டு சென்றனர். இதில், பூசாரிகள் சுவாமியை சுமந்தும், பக்தர்கள் ஈசன், பார்வதி வேடம் அணிந்தும் நேர்த்திக் கடன் செலுத்தினர். பால் குடங்களை ஊர்வலமாக கொண்டு சென்று சுவாமிக்கு அபிஷேகம் செய்து வேண்டுதல் நிறைவேற்றினர். தொடர்ந்து, மகா மங்கள ஆரத்தி, தீர்த்தப்பிரசாதம் வழங்குதல் மற்றும் ஏராளமான பெண்கள் பங்கேற்ற குத்துவிளக்கு பூஜை நடந்தது. மாலை, 4 மணிக்கு, ஸ்ரீஞான சக்தி தெய்வீக கலை குழுவினரின் பக்தி கலை நிகழ்ச்சி நடந்தது. மேலும், மலையப்ப சீனிவாச பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி தாயார் மற்றும் அங்காளபரமேஸ்வரி அம்மன், சிவபெருமான், விநாயகர், முருகர் உற்சவம் திருவீதி உலா நடந்தது.



## மே தினத்தில் வாகன பழுது பார்க்கும் தொழிலாளர்களுக்கு காப்பீடு அட்டைகள் வழங்கல் நிகழ்ச்சிக்கு சங்க செயலாளர் ராஜேந்திரன் தலைமை வகித்தார்

கிருஷ்ணகிரி, மே 03-

கிருஷ்ணகிரியில் மோட்டார் வாகன பழுது பார்க்கும் பணியாளர்கள் நலச்சங்கம் சார்பில், நேற்று மே தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு சங்க செயலாளர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். பொருளாளர் ராஜா முன்னிலை வகித்தார். தலைவர் கிருஷ்ணமூர்த்தி சங்க அலுவலக வளாகத்தில் கொடியேற்றி வைத்து, 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கி உரையாற்றினார்.

இணை செயலாளர் ஸ்ரீராமன் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து, தன்னார்வ மேலாளர் அபரஞ்சிராசன் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.5 லட்சம் மதிப்பிலான விபத்து மற்றும் மருத்துவக் காப்பீட்டு அட்டைகளை வழங்கினார். துணைத் தலைவர் மகேந்திரன் சங்கத்தின் மூத்த உறுப்பினர்களுக்கு சால்வை அணிவித்து கவுரவித்தார். துணை செயலாளர்கள் சந்திரன் மற்றும் எளையப்பன் ஆகியோர் மூத்த உறுப்பினர்களுக்கு பொற்கிழி வழங்கி பாராட்டினர்.

மேலும், மாநில பிரதிநிதி தனவேல் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். கவுரவத் தலைவர் பெரியசாமி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். நிகழ்ச்சியின் முடிவில் துணைத் தலைவர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

## நீலகிரி மாவட்டத்தில் வெயிலின் தாக்கத்தின் காரணமாக தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு வேலை நேரம் மாற்றி அமைக்க கோரிக்கை மனு

நீலகிரி மே.3-

நீலகிரி மாவட்டத்தில் கோடைகால வெயில் தாக்கத்தின் காரணமாக தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வேலை நேரம் மாற்றியமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது இதுகுறித்து, அம்பேதகர் மக்கள் இயக்கம் செயலாளர்இந்திரஜித், தமிழ்நாடு அரசு தொழிலாளர் ஆணையர் (Labour Commission-er), நீலகிரி மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தோட்டங்கள் அதிகம் உள்ளன. இங்கே தோட்ட வேலை செய்பவர்கள்தான் அதிகம் உள்ளனர். தற்போது கோடை காலத்தின் வெப்பதாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக தேயிலை தோட்டங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும் நிழல் இல்லாமல் உள்ளதால் வெப்பநிலை சாதாரண அளவை விட அதிகமாக உயர்ந்து காணப்படுகிறது. இந்நிலையில், அங்கு தினமும் கடின உழைப்பில் ஈடுபடும் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் கடுமையான உடல்நல பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர்.தற்போது தொழிலாளர்கள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வேலை செய்ய வேண்டிய நிலை உள்ளது.இந்த நேரப்பகுதியில் குறிப்பாக காலை 11 மணி முதல் மதியம் 3 மணி வரை வெயிலின் தாக்கம் மிக அதிகமாக இருக்கும்.

இதனால் தொழிலாளர்கள் நேரடியாக வெயில் தாக்கத்திற்கு உள்ளாகி, வெப்பக்காய்ச்சல் (Heat Stroke), நீரிழப்பு (Dehy-dration), தலைசுற்றல், உடல் சோர்வு, தோல் நோய்கள் போன்ற பல்வேறு உடல்நல பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். மேலும், பெண்கள், முதியவர்கள் மற்றும் உடல் பலம் குறைந்த தொழிலாளர்கள் இந்த வெப்பநிலையை சமாளிக்க முடியாமல் பெரிதும் அவதிப்படுகின்றனர். சில நேரங்களில் இந்த நிலைமை உயிருக்கு ஆபத்தானதாக மாறும் அபாயமும் உள்ளது. இதனால் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் குறைவதுடன், அவர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்திலும் பாதிப்பு ஏற்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில், தொழிலாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை முதன்மையாகக் கருத்தில் கொண்டு பணிநேரத்தை மாற்றுவது மிகவும் அவசியமாகிறது. குறிப்பாக, அதிக வெப்பம் நிலவும் மதியம் நேரத்தை தவிர்த்து, பணிநேரத்தை காலை 7 மணி முதல் மதியம் 1 மணி வரை மாற்றி அமைத்தால், தொழிலாளர்கள் வெயில் தாக்கத்திலிருந்து பெருமளவு பாதுகாக்கப் படுவார்கள். இதனால் அவர்களின் உடல்நலம் பாதுகாக்கப்படுவதோடு, பணித்திறனும் மேம்படும். மேலும், அண்டை மாநிலமான கேரளாவில் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு இதேபோன்ற காலை 7 மணிமுதல் மதியம் 1 மணிவரை மட்டும் பணிநேர மாற்றம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அதோடு, தொழிலாளர்களுக்கு உரிய இடைவெளிகளில் போதுமான குடிநீர், ஓய்வு நேரம் மற்றும் அடிப்படை மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும். இது தொழிலா ளர்களின் பாதுகாப்பை மேலும் உறுதி செய்ய உதவும். எனவே, மேற்கண்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு, தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் தற்போதைய பணிநேரத்தை காலை 7 மணி முதல் மதியம் 1 மணி வரை மாற்றி அமைக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் இந்திரஜித் கூறியுள்ளார்.




# ரியான் பராக் அதிரடி வீண்: ராஜஸ்தானை வீழ்த்தியது டெல்லி கேபிடல்ஸ்

ஐபிஎல் 2026 தொடரின் 43வது லீக் ஆட்டத்தில், ராஜஸ்தான் ராயல்ஸ் நிர்ணயித்த 226 ரன்கள் என்ற இலக்கை துரத்திய டெல்லி கேபிடல்ஸ் அணி, 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சவாய் மான்சிங் மைதானத்தில் வெள்ளிக்கிழமை (மே 1) நடைபெற்ற இந்தப் போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த ராஜஸ்தான் அணிக்குத் தொடக்கம் அதிர்ச்சிகரமாக அமைந்தது. இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷி (4) மற்றும் யஷஸ்வி ஜெய்சவால் (6) ஆகியோர் அடுத்தடுத்த ஓவர்களில் ஆட்டமிழந்தனர்.

இருப்பினும், கேப்டன் ரியான் பராக் (90 ரன்கள், 50 பந்துகள்) மற்றும் துருவ் ஜூரெல் (42) ஜோடி 102 ரன்கள் சேர்த்து அணியை மீட்டனர். இறுதி நேரத்தில் டோனோவன் ஃபெரைரா வெறும் 14 பந்துகளில் 47 ரன்கள் (6 சிக்ஸர்கள்) விளாச, ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 225 ரன்கள் குவித்தது. டெல்லி தரப்பில் மிட்செல் ஸ்டார்க் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

226 ரன்கள் என்ற இலக்கை நோக்கி ஆடிய டெல்லி அணிக்கு கே.எல். ராகுல் மற்றும் பதும் நிஸங்கா ஜோடி அசுர வேகத் தொடக்கம் அளித்தது. இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 9.3 ஓவர்களில் 110 ரன்கள் சேர்த்தது. பதும் நிஸங்கா 33 பந்துகளில் 62 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்க, கேப்டன் கே.எல். ராகுல் 40 பந்துகளில் 75 ரன்கள் (6 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள்) குவித்து அணியின் வெற்றிக்கு வலுவான அடித்தளம் அமைத்தார்.

நடுவரிசையில் நிதிஷ் ராணா (33) அதிரடி காட்ட, கடைசி ஓவர்களில் டிரிஸ்டன் ஸ்டப்ஸ் (18) மற்றும் அசுதோஷ் சர்மா (25) ஜோடி நிதானமாக விளையாடி இலக்கை எட்டினர். டெல்லி அணி 19.1 ஓவர்களிலேயே 3 விக்கெட் இழப்பிற்கு 226 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் டெல்லி அணி தனது மூன்று போட்டிகள் தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஆட்டநாயகனாக கே.எல். ராகுல் தேர்வு செய்யப்பட்டார்.

# ‘சின்ன பையனிடம் ஆவேசம் காட்டுவதா?’ சூரியவன்ஷிக்கு ‘சென்ட் ஆஃப்’ கொடுத்த ஜேமிசனுக்கு எச்சரிக்கை!

ஐபிஎல் சென்சேஷன் என்று அழைக்கப்படும் 15 வயது வைபவ் சூரியவன்ஷியை நேற்று பவுல்டு செய்த டெல்லி கேப்பிடல்ஸின் நியூஸிலாந்து வேகப்பந்து வீச்சாளர் கைலி ஜேமிசன் அளவுக்கு மீறி ஆக்ரோஷம் காட்டி சூரியவன்ஷிக்குப் ‘பிரியாவிடை’ கொடுத்தது சர்ச்சையாகியுள்ளது. இதனையடுத்து கைலி ஜேமிசன் ஒரு தரமதிப்புப் புள்ளியை இழக்கிறார்.




ஐபிஎல் 2026 தொடரின் 43வது போட்டி நேற்று சவாய் மான்சிங் மைதானத்தில் நடைபெற்றது. அந்தப் போட்டியில் நடந்த சம்பவம் தொடர்பாக, ஐபிஎல் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில், ஜேமிசன் ஐபிஎல் நடத்தை விதிமுறைகளின் ஒன்றாம் லெவல் விதியை மீறியதாக கூறப்பட்டுள்ளது.

ஐபிஎல் நடத்தை விதிமுறைகளின் பிரிவு 2.5 படி, மற்றொரு வீரரை தூண்டக்கூடிய வகையில் பேசுதல் அல்லது சைகை காட்டுதல் குற்றமாக கருதப்படுகிறது. இந்த விதியை மீறியதாக ஜேமிசன் ஒப்புக்கொண்டு, போட்டி நடுவர் ராஜீவ் சேத் விதித்த தண்டனையை ஏற்றுக்கொண்டார்.

இந்த சம்பவம் முதல் இன்னிங்ஸின் இரண்டாவது ஓவரில் நடந்தது. அப்போது வெறும் 15 வயதான சூர்யவன்ஷியை யார்க்கர் வீசி பவுல்டு அவுட் செய்த பிறகு, ஜேமிசன் அவரை நோக்கி ஆவேசமாக சென்றார்.

வைபவ் சூரியவன்ஷியின் விக்கெட் அந்தத் தருணத்தில் பெரிய விக்கெட் தான். இதனை மறுக்க முடியாது, ஆனாலும் 15 வயது சிறுவரிடம் இப்படியா நடந்து கொள்வது என்று கிரிக்கெட் ரசிகர்கள் நேற்று முதல் தங்கள் கடும் அதிருப்தியை ஜேமிசன் மீது வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஜாகீர் கான் ஒருமுறை மேத்யூ ஹெய்டன் விக்கெட்டை வீழ்த்திய பிறகு அசிங்கமாக அவரைப் பார்த்து ஏதோ செய்கை செய்தார். அப்போதும் ஜாகீர் கானுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அப்போது இயன் சாப்பல் ஒன்று கூறினார். கிரீசில் நிற்கும் போதுதான் பேட்டரை ஸ்லெட்ஜ் செய்யலாம். அதில் ஒரு வகையான நியாயம் இருக்கிறது, அவரை செட்டில் ஆக விடாமல் தடுக்கும் உத்தி என்று கூறலாம், ஆனால் அவுட் ஆன வீரரை இழிவாக செய்கை காட்டுவது அநாகரிகம் என்றார்.

கைலி ஜேமிசன் நேற்று அதைத்தான் செய்தார். ஆனால் தன் தவறை ஒப்புக் கொண்டார். அதுவும் சின்னப் பையன், வளர்ந்து வரும் ஓர் இளம் வீரரிடம் தன் வீரத்தைக் காட்டுவதா என்றே ரசிகர்கள் ஜேமிசனைக் கண்டித்து வருகின்றனர்.

# ராஜஸ்தான் ராயல்ஸ் தவறு செய்தது எங்கே?

ராஜஸ்தான் ராயல்ஸ் அணி தன் நேற்றைய போட்டிக்கு முந்தைய போட்டியில் 230 ரன்களைத் தடுக்க முடியாமல் தோற்றது. நேற்று 226 ரன்கள் எடுத்தும் தோற்றது. அன்று டாஸ் வென்ற எதிரணி இவர்களை பேட் செய்ய அழைத்து வென்றது. நேற்று ராஜஸ்தான் கேப்டன் ரியான் பராக் பேட்டிங்கைத் தேர்வு செய்தார்.




அதுவும் ஜெய்ஸ்வால் ஒரு அற்புதமான ஸ்டார்க் பந்து சிக்சருக்குப் பிறகே ஃபுல்டாஸில் துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்தார். அதே போல் சூரியவன்ஷி எதிர்பார்த்ததைப் போல் கைலி ஜேமிசனை நேராகப் பளார் என்று பவுண்டரி விளாசி அடுத்த பந்தே செம யார்க்கரில் பவுல்டு ஆகி வெளியேற, ராஜஸ்தானுக்கு சிக்கல் தொடங்கியது. ஆனால் கேப்டன் பராக் தன் விமர்சகர்களுக்குப் பதில் தரும் முகமாக 50 பந்துகளில் 90 ரன்களை 8 பவுண்டரிகள் 5 சிக்சர்களுடன் விளாச, துருவ் ஜுரெல் 30 பந்துகளில் 42 என்று சுணக்கம் காட்டினார்.

ஜடேஜாவை முன்னால் இறக்கி ரியான் பராக் பெரும் தவறு செய்தார். ஜடேஜாவைக் கண்டு எதிரணி பவுலர்கள் யாரும் அஞ்ச மாட்டார்கள். மாறாக டோனவன் ஃபெரேராவை இறக்கியிருந்தால் ஸ்கோர் இன்னும் 30 ரன்கள் கூடுதலாகியிருந்திருக்கும், டெல்லி சேஸ் செய்திருக்க வாய்ப்பில்லை. டொனோவன் பெரெரா போன்று 14 பந்துகளில் அரைசதம் பக்கம் வருமாறு அடிக்கும் டெத் ஓவர் பிளேயர்கள் இப்போது அரிதிலும் அரிது.

ஏன் அவரை விடுத்து ஜடேஜாவை இறக்க வேண்டும். ஜடேஜா பவுலிங்கிலும் 3 ஓவர்கள் வீசி 33 ரன்கள் என்று அணியில் தேவையற்ற லக்கேஜ் ஆக இருந்து வருகிறார். பெரேரா யார்க்கர்களை அனாயசமாக சிக்சர் விளாசுகிறார். ஜடேஜாவை ஏன் முன்னால் இறக்க வேண்டும் என்று கேட்டால் பராக், ஒரு அரதப் பழசான கருத்தை முன் வைத்தார், இடது, வலது காம்பினேஷன் என்கிறார். அதெல்லாம் டி20யில் தேவையில்லாத ஆணியே. ஜடேஜாவினால் ஸ்பின் பவுலிங்கை அடித்து ஆட முடியவில்லை என்பது ஊரறிந்த விஷயம்.

துருவ் ஜுரெல், பராக் கூட்டணியே கூட ஆங்காங்கே கருணையற்ற அடி என்பதை மறந்து ஏனோ தானோ என்று ஆடியதும் தோல்விக்கு இன்னொரு காரணம், குறிப்பாக 9வது ஓவரில் அக்சர் படேலை இரண்டு டவரிங் சிக்சர்களை விளாசிய பராக் அந்த ஓவரை முழுதும் காய்ச்சி எடுத்திருக்க வேண்டும் மாறாக ஸ்ட்ரைக்கை ரொடேட் செய்து 2 சிங்கிள் 2 டாட்பால்கள் என்று அந்த ஓவர் வீணடிக்கப்பட்டது. அடுத்த குல்தீப் ஓவரிலும் 6 ரன்களையே எடுத்தனர். ஜுரெல், பராக் இருவருமே அடிக்கப் பார்க்காமல் பந்தைத் தள்ளி விட்டு ஒன்று அல்லது இரண்டு ரன்களுக்காகவே பார்த்தனர். ஒரு புது பவுலர் வருகிறார் என்றால் அவரை முதலிலேயே அடித்து அவருக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும், ஆனால் பராக், ஜுரெல் இருவரும் பூப்பந்து விளையாடினர்.

ஐபிஎல் கிரிக்கெட்டில் ஒருமுனையில் அதிரடி இன்னொரு முனையில் ஃபிபிடில் வாசிப்பது என்பதெல்லாம் போய் விட்டது. இரு முனைகளிலிருந்தும் ரன்கள் குவிய வேண்டுமென்பதே நடப்பு ஐபிஎல் தொடரின் தாரக மந்திரம். இப்படியாக வழக்கொழிந்த முறையில் ராஜஸ்தான் ஆடியதால் நேற்று 225 ரன்கள் எடுத்தும் தோற்க நேரிட்டது.




# தாமஸ் கோப்பை பாட்மிண்டன் அரை இறுதிக்கு முன்னேறியது இந்திய அணி

டென்மார்க்கின் ஹார்சென்ஸ் நகரில் தாமஸ் கோப்பை பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் கால் இறுதி சுற்றில் இந்திய ஆடவர் அணி நேற்று சீன தைபேவுடன் மோதியது.

முதலில் நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவின் லக் ஷயா சென், சவு தியென் சென்னுடன் மோதினார். இதில் லக் ஷயா சென் 18–21, 22–20, 21–17 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இந்த ஆட்டம் ஒரு மணி நேரம் 28 நிமிடங்கள் நடைபெற்றது. லக் ஷயா செனின் வெற்றியால் இந்திய அணி 10 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி யானழ சியு சியாங் சியே, வாங் சிலின் ஜோடியை எதிர்கொண்டது. இதில் சாட்விக், ஷிராக் ஜோடி 23–21, 19–21, 21–12 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. இதையடுத்து நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி 21–16, 21–17 என்ற நேர் செட் கணக்கில் லின் சுன் யியை தோற்கடித்தார். இந்த ஆட்டம் 48 நிமிடங்களில் முடிவடைந்தது.

முடிவில் இந்திய அணி 30 என முழுமையாக வெற்றி பெற்று அரை இறுதி சுற்றுக்கு முன்னேறியது. இதன் மூலம் இந்திய அணி குறைந்த பட்சம் வெண்கலப் பதக்கம் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது. 2022ம் ஆண்டு சாம்பியனான இந்திய அணி அரை இறுதி சுற்றில் ஜப்பான் அல்லது பிரான்ஸுடன் பலப்பரீட்சை நடத்தும்.

# சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் அம்ப்ரிஷ்

ஐபிஎல் தொடரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் இடம் பெற்றிருந்த வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளரான ஷிவம் மாவி இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக நடப்பு ஐபிஎல் தொடரிலிருந்து விலகியுள்ளார். இதையடுத்து அவருக்கு பதிலாக தமிழகத்தை சேர்ந்த ஆல்ரவுண்டரான ஆர்.எஸ்.அம்ப்ரிஷ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் யு19 உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியில் அம்ப்ரிஷ் இடம் பெற்று இருந்தார். அந்தத் தொடரில் அவர், 11 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தியிருந்தார். வலதுகை மித வேகப்பந்து வீச்சாளரும்,



இடது கை பேட்ஸ் மேனுமான அம்ப்ரிஷை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி ரூ.30 லட்சத்துக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

# போட்டி நடைபெறும் நாட்களில் தோனி ஏன் களத்துக்கு வருவதில்லை? மைக்கேல் ஹஸ்ஸி விளக்கம்

ஐபிஎல் தொடரில் சிஎஸ்கே அணி சேப்பாக்கத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியுடன் மோதுகிறது. இந்த ஆட்டத்திலும் தோனி களமிறங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை. நடப்பு சீசனில் கணுக்காலில் காயம் அடைந்துள்ள அவர், இதுவரை களமிறங்கவில்லை. பேட்டிங் மற்றும் விக்கெட் கீப்பிங் பயிற்சியில் தோனி தீவிரம் காட்டி வருகிறார்.







அதேவேளையில் ரன்கள் ஓடுவதில் தோனி சிரமத்தை சந்தித்து வருவதாக தெரிகிறது. இதன் காரணமாகவே தோனி களமிறங்குவது தள்ளிப் போகிறது. போட்டிக்கு முந்தைய நாட்களில் களத்தில் பயிற்சியில் ஈடுபடும் தோனி, சக அணி வீரர்களுக்கு அறிவுரைகளையும் வழங்கி வருகிறார். எனினும் போட்டி நடைபெறும் நாட்களில் தோனி மைதானத்துக்கு வருவதை தவிர்த்து விடுகிறார்.

இதுதொடர்பாக நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது சிஎஸ்கே அணியின் பேட்டிங் பயிற்சியாளரான மைக்கேல் ஹஸ்ஸி கூறியதாவது: தோனி எப்போதும் அணியின் நலனை விரும்பும் வீரர். அவர், மைதானத்துக்கு வந்தால், அது மற்ற வீரர்களின் கவனத்தை திசைதிருப்பக்கூடும் என்று கவலைப்படுகிறார். தோனி மைதானத்துக்கு வந்தால் கண்டிப்பாக கேமராக்கள் அவர் மீதே இருக்கும், ரசிகர்கள் அவருக்காக ஆரவாரம் செய்வார்கள். இதுவே தோனி போட்டி நடைபெறும் நாட்களில் மைதானத்துக்கு வராமல் இருப்பதன் பின்னணியில் உள்ள காரணம்.

நிச்சயமாக அவர் ஹோட்டல் அறையில் இருந்தபடி போட்டிகளை மிக நெருக்கமாக கவனித்து வருகிறார். தனிப்பட்ட முறையில் அவர், ஓய்வறையில் எங்களுடன் இருப்பதை நான் மிகவும் விரும்புகிறேன். தனது அனுபவங்களை வீரர்களுக்கு வழங்குகிறார். ஆனால், மற்ற வீரர்களுக்கு தான் ஒரு கவனச்சிதறலாக இருக்கக்கூடாது என்பதற்காகவே, போட்டி நாளில் மட்டும் தள்ளி இருக்க முடிவு செய்துள்ளார்.

தோனி களமிறங்குவது மும்பை அணிக்கு எதிரான போட்டியா அல்லது அதற்கு அடுத்த போட்டியா என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் காயத்தில் இருந்து அவர் வேகமாக மீண்டு வருகிறார். தோனியின் பேட்டிங் மற்றும் விக்கெட் கீப்பிங் திறன்களின் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. ஆனால், ஒரு இன்னிங்ஸின் கடைசி கட்டத்தில் மிக வேகமாக ஓடி எடுக்க வேண்டிய ரன்களுக்கு தேவையான வலிமை அவரிடம் இருப்பதை உறுதி செய்ய வேண்டியது உள்ளது.

தனது கெண்டைக்கால் தசை மீது அவருக்கு முழு நம்பிக்கை வந்தவுடன், அவர் விளையாடுவதற்குச் சம்மதம் தெரிவிப்பார் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். தற்போது நாங்கள் அவரது முடிவிற்காகவே காத்திருக்கிறோம். ஒட்டுமொத்த சென்னையும் காத்திருக்கிறது. அனைத்து ரசிகர்களும் அவர் வருவார் என்று நம்பிக் காத்திருக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# வைபவ் சூர்யவன்ஷி விக்கெட்டை ஆக்ரோஷமாக கொண்டாடிய ஜேமிசன்: ஐபிஎல் நிர்வாகம் நடவடிக்கை

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் 15 வயது இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷியின் விக்கெட்டை வீழ்த்தியதை ஆக்ரோஷமாக கொண்டாடினார் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியின் பவுலர் கைல் ஜேமிசன். இந்நிலையில், நடத்தை காரணமாக அவர் மீது ஐபிஎல் நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நடப்பு ஐபிஎல் சீசனின் 43வது லீக் ஆட்டம் ஜெய்ப்பூரில் நேற்று (மே 1) நடைபெற்றது. இதில் ராஜஸ்தான் 7 அணியை விக்கெட்டுகளில் வீழ்த்தியது டெல்லி அணி. 226 ரன் என்ற இலக்கை 19.1 ஓவர்களில் டெல்லி அணி எட்டியது. இதில் ராஜஸ்தான் வீரர் வைபவ் சூர்யவன்ஷியின் விக்கெட்டை வீழ்த்தியதை ஆக்ரோஷமாக கொண்டாடினார் டெல்லி வீரர் ஜேமிசன். அவரது செயலுக்கு சமூக வலைதள பயனர்கள் தங்கள் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

இந்த ஆட்டத்தில் டாஸை வென்ற ராஜஸ்தான் ராயல்ஸ் அணி முதலில் பேட் செய்தது. அப்போதுதான் அந்த சம்பவம் நடைபெற்றது. ராஜஸ்தான் அணிக்காக யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் வைபவ் சூர்யவன்ஷி இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர். மறுபக்கம் டெல்லி அணிக்காக ஸ்டார்க் மற்றும் ஜேமிசன் ஆகியோர் தொடக்க ஓவர்களை வீசினர்.

இதில் முதல் ஓவரில் ஜெய்ஸ்வால் விக்கெட்டை ஸ்டார்க் கைப்பற்றினார். அடுத்த ஓவரை ஜேமிசன் வீசினார். அதில் முதல் மூன்று பந்துகளை எதிர்கொண்ட ராஜஸ்தான் வீரர் துருவ் ஜூரேல், ஒரு சிங்கிள் மட்டுமே எடுத்தார். அடுத்த பந்தை பவுண்டரிக்கு விளாசினார் வைபவ் சூர்யவன்ஷி. அதற்கடுத்த பந்தில் அவரது விக்கெட்டை வீழ்த்தினார் ஜேமிசன். அதன் பின்னர் வைபவ் சூர்யவன்ஷி அருகே சென்று விக்கெட் வீழ்த்தியதை ஆக்ரோஷமாக ஜேமிசன் கொண்டாடினார். அதுதான் சர்ச்சையானது. இது ஐபிஎல் நன்னடத்தை விதி 2.5ஐ மீறிய செயலாகும். இந்த விவகாரத்தில் அவருக்கு ஒரு தகுதியிழப்பு புள்ளி வழங்கப்பட்டுள்ளது. இதை ஆட்ட நடுவர் ராஜீவ் சேத் உறுதி செய்துள்ளார்.

“என் வாழ்நாளில் 15 வயது சிறுவன் ஒருவரை கண்டு நான் இவ்வளவு அஞ்சியதே இல்லை என்று நினைக்கிறேன். ஆனால், இந்தப் போட்டிக்குத் தயாராகும் வகையில் நாங்கள் நிச்சயமாகச் சில திட்டங்களை மேற்கொண்டிருந்தோம். அது பலனளித்தது மகிழ்ச்சியாக இருந்தது” என்று இந்த ஆட்டத்துக்கு பிறகு ஜேமிசன் தெரிவித்துள்ளார்.

# ஈரான் நிச்சயம் ஆடும் ஃபிபா தலைவர் உறுதி

நியூயார்க்: உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் இந்தாண்டு அமெரிக்கா, மெக்சிகோ, கனடா நாடுகளில் நடைபெற உள்ளன. இதில் பங்கேற்க ஈரான் உட்பட 48 நாடுகள் தகுதி பெற்றுள்ளன. தற்போது அமெரிக்கா ஈரான் இடையே போர் நடந்து, இறுக்கமான சூழல் காணப்படுவதால் ஈரான், உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளில் ஆடுவது கேள்விக்குறியானது. இந்நிலையில், சர்வதேச கால்பந்து அமைப்பான ஃபிபாவின் தலைவர் கியானி இன்பேன்டினோ கூறுகையில், ‘உலகக் கோப்பை போட்டிகளில் ஆட ஈரான் தகுதி பெற்றுள்ளது. எனவே, போட்டிகளில் அந்நாட்டின் அணி நிச்சயம் பங்கேற்கும்’ என்றார்.



